# 6

# இறைக் கொள்கையும் அரச நிதியும்

அரசிறைச் சேகரிப்பில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டமைக்கிடையிலும் சில முக்கிய இறை மீதிகளில் காணப்பட்ட முன்னேற்றங்களினால் பிரதிபலிக்கப்பட்டவாறு 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டின. மொ.உ.உற்பத்திக்கான அரசிறை விகிதம் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 9.0 சதவீதத்திலிருந்து இக்காலப்பகுதியில் 8.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு குறிப்பாக இறக்குமதித் தீர்வைகள் மற்றும் செஸ் தீர்வைகளின் குறைந்த வரி அரசிறைச் சேகரிப்புக்களே காரணமாகும். 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் கூட 2017இன் இதே காலப்பகுதியில் 13.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 12.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு மீண்டெழும் செலவினத்திலும் அரச முதலீடுகளிலும் ஏற்பட்ட குறைப்பே காரணமாகும். மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு உதவுதொகைகள், மாற்றல்கள், சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான குறைந்த செலவினங்களே முக்கிய காரணமாகும். உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல்களில் காணப்பட்ட மெதுவான போக்கு அரச முதலீடுகள் குறைவடையக் காரணமாயிருந்தன. பலயீனமான அரசிறைச் சேகரிப்புக்களுக்கு மத்தியிலும் செலவினத்தில் காணப்பட்ட மெதுவான போக்கு முக்கிய இறைக் குறிகாட்டிகளில் முன்னேற்றத்தினைப் பிரதிபலித்தது. இதன்படி, 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2017இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட 4.0 சதவீதத்திலிருந்து மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 3.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு அரச செலவினத்தில் ஏற்பட்ட குறைப்பு அரச அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க உயர்வாக இருந்தமையே காரணமாகும். அரசிறைக்கும் வட்டியல்லாச் செலவினத்திற்குமிடையிலான வேறுபாட்டினைப் பிரதிபலிக்கின்ற ஆரம்பக் கணக்கு ஆய்விற்குரிய காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 0.4 சதவீத மிகையொன்றினை (ரூ. 57.6 பில்லியன்) பதிவுசெய்தது. அதேவேளை, ஆரம்ப மீதி இலக்கு - பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் 2018 யூனிற்காக நிர்ணயிக்கப்பட்ட கணியம்சார் செயலாற்றமும் அரசாங்கத்தினால் அடையப்பட்டது. எனினும், 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் அரசிறைக்கும் மீண்டெழும் செலவினத்திற்குமிடையிலான வேறுபாட்டினைப் பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 0.9 சதவீதத்திலிருந்து மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 1.0 சதவீதத்திற்கு அதிகரித்து அரசாங்கத்தின் குறைச்சேகரிப்பு நிலையினை எடுத்துக்காட்டியது. திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு அரசாங்கம் வெளிநாட்டு மூலங்களின் மீது பெருமளவிற்குத் தங்கியிருந்தது. உள்நாட்டு நிதியிடலைப் பொறுத்தவரையில் வங்கித்தொழில் துறையிலிருந்தான தேறிய கடன்பாடுகள் இக்காலப்பகுதியில் தேறிய மீள்கொடுப்பனவினைப் பதிவுசெய்த வேளையில் வங்கியல்லாத் துறையிலிருந்தான நிதியிடல் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இறைத் துறை சில மேம்பட்ட செயலாற்றத்தினைக் காட்டிய போதும் எதிர்பார்க்கப்பட்ட உத்வேகத்தினைப் பேணுவதற்கு முன்கூட்டிய செயற்பாடுகள் சார்ந்த வழிமுறைகளை மேற்கொண்டாலன்றி 2018 வரவு செலவுத்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட இறை இலக்குகளை எய்துவதற்கு சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இறக்குமதித் தீர்வைகள் மற்றும் செஸ் தீர்வைகளிலிருந்தான குறைந்த அரசிறைச் சேகரிப்புக்கள் மற்றும் நிதிச் சட்டத்திற்கான திருத்தங்கள் போன்ற சில அரசிறைகளை அதிகரிக்கின்ற வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட தாமதம் என்பனவற்றின் காரணமாக குறித்துரைக்கப்பட்ட அரசிறை இலக்குகளிலிருந்து அரசிறையில் குறிப்பிடத்தக்க புரள்வுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. செலவினப்பக்கத்தில் அரச முதலீடுகளில் காணப்பட்ட வீழ்ச்சி நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் மீதும் அபிவிருத்தியின் மீதும் எதிர்மறையான தாக்கத்தினைக் கொண்டிருக்கிறது. இதன்படி, இறைத் துறையில் காணப்படும் சமநிலையற்ற தன்மை, ஒட்டுமொத்தப் பேரண்டப் பொருளாதாரத்தின் உறுதியற்றதன்மைக்குப் பங்களிக்குமாகையால் விரைவில் தேர்தலொன்றை எதிர்பார்க்கும் பின்னணியொன்றில் எதிர்பார்க்கப்பட்ட இறைப் பயணத்தினை எய்துவதற்கான அரசாங்கத்தின் வலுவான கடப்பாடுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

## இறைக் கொள்கை வழிமுறைகள்

- **நடுத்தர காலத்தில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை மொ.உ.உற்பத்தியின் 3.5 சதவீதத்திற்குக் குறைப்பதனையும் வெளிநின்ற அரச படுகடனை மொ.உ.உற்பத்தியின் 70.0 சதவீதத்திற்குக் குறைப்பதனையும் நோக்கமாகக் கொண்ட அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சிப் பாதையினை 2018இலும் அரசாங்கம் தொடர்ந்தது.** இந்நடுத்தரகாலக் குறிக்கோள்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் அரசிறைத் திரட்சியை அதிகரிப்பதற்கும் அரச செலவினங்களைச் சிக்கனப்படுத்துவதற்குமாக அரசாங்கம் பல கொள்கை வழிமுறைகளை மேற்கொண்ட வேளையில் படுகடன் உறுதிப்பாட்டினையும் உறுதிப்படுத்தியது. வரவு செலவுத்திட்டம் - 2018 ஏற்கனவேயுள்ள வரி முறைமையினை இலகுபடுத்துவதனையும் வரித் தளத்தினை விரிவாக்குவதனையும் இலக்காகக் கொண்டு பல அரசிறை வழிமுறைகளை முன்மொழிந்த வேளையில் வரி நிருவாகத்திற்கு சீர்திருத்தங்களையும் அறிமுகப்படுத்தியது. அவற்றில் சில 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் நடைமுறைக்கு வந்தன. மேலும், அரச செலவினத்தினை முன்னுரிமைப்படுத்துவதற்கும் சிக்கனப்படுத்துவதற்குமான வழிமுறைகள் எடுக்கப்பட்ட வேளையில் செலவினத்தை சரியான பாதையில் இட்டுச்செல்வதற்காக காலாண்டு இறை இலக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மற்றைய விடயங்களுடன் நடுத்தர காலத்தில் படுகடன் முகாமைத்துவ உபாயங்களை மேம்படுத்தி வலுப்படுத்துவதற்காக 2018ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க தீவிரப் பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் போன்ற சட்டவாக்க வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்தகைய நடுத்தர கால இலக்குகளை நோக்கி முன்னேறும் விதத்தில் அரசாங்கம் அதன் 2018 வரவு செலவுத்திட்டத்தில் பற்றாக்குறையினை 2017இன் 5.5 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 4.8 சதவீதத்திற்கு உறுதியாக குறைப்பதனை அறிவித்தது. இம்முன்னேற்றத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் 2018 இறுதியில் நடைமுறைக் கணக்கு மிகையினை மொ.உ.உற்பத்தியின் 0.5 சதவீதத்தில் பேணுவதற்கும் ஆரம்பக் கணக்கு மீதியை மொ.உ.உற்பத்தியின் 1.0 சதவீதத்தில் பேணுவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

- **2018 ஏப்பிறல் 1இலிருந்து நடைமுறைக்கு வந்த 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம் ஏற்கனவேயுள்ள வருமான வரி அமைப்பினை இலகுபடுத்தி ஒழுங்குமுறைப்படுத்தியதன் மூலமும் நேரடி வரித்தளத்தினை விரிவாக்கியதன் மூலமும் நிருவாக அதிகாரங்களை வலுப்படுத்தியதன் மூலமும் அரசாங்கத்தின் அரசிறையினைத் திரட்டும் முயற்சிக்கு ஆதரவளித்த அதேவேளையில் பன்னாட்டுச் சிறந்த நடைமுறைகளை இலங்கை வரி முறைமைக்கு அறிமுகப்படுத்தியது.** தனியாள் வருமானத்திற்கான வரியற்ற ஆரம்ப வருமானம் முன்னைய மட்டமான ரூ.500,000இல் பேணப்பட்ட போதும் தொழில்நிலை வருமானத்திற்கான வருடாந்த வரியற்ற ஆரம்ப வருமானம் ரூ.750,000 இலிருந்து ரூ.1.2 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. மேலும், தொழில்நிலை வருமானம் உள்ளிட்ட தனியாள் வருமான வரிக்கான வரிப் பிரிவுகள் ரூ.100,000 இனால் ரூ.600,000 இற்கு விரிவாக்கப்பட்ட வேளையில் மிகவுயர்ந்த எல்லை வருமான வரி 16 சதவீதத்திலிருந்து 24 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. மேலும், புதிய சட்டம் கம்பனி வருமான வரி அமைப்பினை 3 அடுக்கு வரி அமைப்பிற்கு ஒழுங்குமுறைப்படுத்தியது: குடிவகை, புகையிலை, பந்தயம் மற்றும் சூதாட்டம் என்பனவற்றிற்கு 40 சதவீத வரி வீதம்; வங்கித்தொழில், நிதி, காப்புறுதி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு 28 சதவீதம் கொண்ட நியம வரி வீதம்: அத்துடன் மற்றைய அனைத்துத் துறைகளுக்கும் 14 சதவீத வரி வீதம். மேலும், மூலதனச் சொத்துக்களின் தேறல் மீது 10 சதவீதம் கொண்ட மூலதன இலாப வரியொன்று அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் வதியும் தனிப்பட்டவர்களின் வட்டி வருமானத்தின் மீதான பிடித்துவைத்தல் வரி வீதம் 2.5 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. எனினும், மூத்த பிரசைகளின் வங்கி வைப்புக்களிலிருந்து ஆண்டொன்றிற்கு வட்டி வருவாயாக ரூ.1.5 மில்லியன் வரையிலான தொகைக்கு பிடித்து வைத்தல் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. அதேவேளை, புதிய வரிக் கைநூலொன்று 2018 ஏப்பிறலில் வெளியிடப்பட்டதுடன் வரித் துறையிலுள்ள தொழில்சார்ந்தோருக்கும் பொதுமக்களுக்கும் புதிய சட்டம் தொடர்பான விழிப்புணர்வினை அதிகரிக்கும் பொருட்டு பயிற்சித் தொடர்களும் நடாத்தப்பட்டன.

- **பன்னாட்டு விலைகளுக்கும் சில பண்டங்களின் உள்நாட்டு நிரம்பலிற்கும் ஒத்திசைவாக உள்நாட்டு விலைகளை உறுதிப்படுத்துவதற்கு இவ்வாண்டுப்பகுதியில் சுங்கத்தீர்வைக்கும் சிறப்புப் பண்டத் தீர்வைக்கும் பல மாற்றங்கள் செய்யப்பட்டன.** இதன்படி, ஏப்பிறல் 2018இல் தங்கக் கடத்தலையும் தங்க இறக்குமதியையும் ஊக்கமிழக்கச் செய்யும் நோக்குடன் தங்க இறக்குமதிகள் மீது 15 சதவீத சுங்கத் தீர்வையொன்று விதிக்கப்பட்டது. விலையிடல் சூத்திரம்

6

2018 மே 11ஆம் நாளன்று அறிமுகப்படுத்தப்பட்டதுடன் பெற்றோல் மற்றும் டீசல் மீதான சுங்கத்தீர்வையும் தீர்வைத் தளர்த்தல்களும் திருத்தப்பட்டன. இதன்படி பெற்றோல் (92 ஒக்ரேன்) இறக்குமதி மீதான சுங்கத் தீர்வையும் தீர்வைத் தளர்த்தலும் முறையே லீற்றர் ஒன்றிற்கு ரூ.25.42 ஆகவும் லீற்றர் ஒன்றிற்கு ரூ.7 ஆகவும் விளங்கின. இதேபோன்று தன்னியக்க டீசலுக்கான சுங்கத் தீர்வையும் தீர்வைத் தளர்த்தலும் முறையே லீற்றருக்கு ரூ.5.85 ஆகவும் லீற்றர் ஒன்றிக்கு ரூ.2 ஆகவும் காணப்பட்டன. மேலும், பெற்றோல் (95 ஒக்ரேன்) மற்றும் சிறப்பு டீசல் என்பனற்றின் மீதான சுங்கத் தீர்வைகள் ஏற்புடைத்தான தீர்வைத் தளத்தல்கள் புறக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக முறையே லீற்றர் ஒன்றிற்கு ரூ.25.59 இற்கும் லீற்றர் ஒன்றிற்கு ரூ.10.55 இற்கும் குறைவடைந்தன. அதேவேளை, இவ்வாண்டுப்பகுதியில் துருவிய அல்லது தூளாக்கப்பட்ட சீஸ் இறக்குமதி மீது சிறப்புப் பண்டத் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் உழுந்து, பருப்பு வகை மீது சிறப்புப் பண்டத் தீர்வை அதிகரிக்கப்பட்டது.

- **வரித் திரட்டலை வலுப்படுத்தும் நோக்குடன் வரி நிருவாகத்தினை மேம்படுத்துவதற்கு பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** இதற்கமைய, உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தில் ஏற்படுத்தப்பட்டு வரும் அரசிறை, நிருவாகம், முகாமைத்துவத் தகவல் முறைமை, 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளை கூட்டிணைக்கும் பொருட்டு தரமுயர்த்தப்பட்டு வருகிறது. மேலும், வரி நிருவாகத்தினை நவீனமயப்படுத்துவதற்காக உண்ணாட்டரசிறைத் திணைக்களம் நிறுவன ரீதியான மற்றும் வியாபார நடைமுறைச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தத் தொடங்கியது. இவை தொழிற்பாட்டு தொடர்களுடன் சேர்த்து உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தினை மீளமைத்தல், வடிவமைப்பு மற்றும் கண்காணிப்பு அலகினை உருவாக்குதல், வரி செலுத்துவோருடனான செயற்பாடுகளை விரைவுபடுத்துவதற்காகக் கூடியளவு வினைத்திறன்மிக்க முகாமைத்துவ அமைப்பு, பாரிய வரி செலுத்துவோர் அலகினை வலுப்படுத்தல், கட்டாயமாக இ-கோப்புப்படுத்தலை அறிமுகப்படுத்தல் மற்றும் வரி செலுத்துவோர் அடையாள இலக்கங்களைப் பயன்படுத்துவதனை அதிகரித்தல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. அதேவேளை, இலங்கைச் சுங்கமும் இறக்குமதியாளர் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு வசதியளிப்பதற்காக தேசிய ரீதியிலான ஒரே கூரையின் கீழான நிலையமொன்றினை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தது. நிதி மற்றும் ஊடக அமைச்சில் ஏற்படுத்தப்பட்டுவரும் ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை இலங்கையில் அரச நிதியியல் முகாமைத்துவத்தினை நவீனமயப்படுத்துவதற்குப் பங்களித்தது. இதன்படி, ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ முறைமை 2019ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் தயாரிப்பு வேலைகளுக்கான முக்கிய முறைமை ஒன்றாகப் பயன்பட்டு வருவதுடன் அரச அலுவலர்களுக்கு அறிவூட்டுவதற்கு தீவுமுழுவதிலும் விழிப்புணர்வு செயலமர்வுகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும், 2006ஆம் ஆண்டிலிருந்து 2017ஆம் ஆண்டு வரையிலான வரலாற்று ரீதியான தரவுகள் சரிபார்க்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமைக்குள் தரவேற்றம் செய்யப்பட்டிருப்பதுடன் ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையினை குறிப்பிட்ட அரச நிறுவனங்களுடன் இடைமுகப்படுத்தும் வேலைகள் ஏற்கனவே நிறைவுசெய்யப்பட்டு பரீட்சிக்கப்பட்டிருக்கின்றன.

- **செலவினப்பக்கத்தில் இவ்வாண்டுப்பகுதியில் இறை நழுவல்களை குறைக்கும் விதத்தில் பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** இதன்படி, அரச நிதிகள் மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்காக 2017இற்கான வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு 2018இன் முதல் காலாண்டிற்கான காலாண்டுச் செலவினம் மற்றும் வருமான பெறுபேற்று அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வறிக்கையின்படி, 2018இன் முதல் காலாண்டில் அரசிறை மற்றும் செலவினப் பெறுபேறுகள் இரண்டும் இலக்கிடப்பட்ட மட்டங்களுக்கு கீழேயே தொடர்ந்தும் காணப்பட்டன. 263/2017ஆம் இலக்க அரச கணக்குகளின் சுற்றறிக்கையின் கீழ் அனைத்துச் செலவிடல் முகவர்களும் வருடாந்த வரவு செலவுத்திட்ட ஒதுக்குகளின் முறையியல் சார்ந்த பயன்பாட்டினை உறுதிப்படுத்தும் பொருட்டு 2018இற்காக காலாண்டு அடிப்படையில் அவர்களது வருடாந்த வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். மேலும், அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் உந்து ஊர்திகளின் கொள்வனவுச் செயன்முறையினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக தேசிய வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கை இல. 03/2018இன் கீழ் வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன. மேலும், அரசாங்கத்தின் பல்நோக்கு அபிவிருத்தித் தொழிற்பாடுகளுக்காக பயன்படுத்திக் கொள்ளும்

பொருட்டு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் தொடர்பிலான அனைத்துத் தகவல்களையும் கூட்டிணைக்கும் விதத்தில் பல்நோக்குத் தரவுத்தளமொன்று நிதி அமைச்சினால் உருவாக்கப்பட்டு வருகிறது. துல்லியமானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான தகவல்களுடன் விளங்கி சிறந்த கொள்கை வகுப்பொன்றிற்கு இது வசதியளிப்பதுடன் நிலச்சரிவு மற்றும் வெள்ளம் போன்ற அவசரகாலச் சூழ்நிலைகளுக்கு நிதி அமைச்சு உடனடியாகச் செவிசாய்ப்பதனை இயலுமைப்படுத்தும்.

- **ஓய்வூதியக் கொடுப்பனவுகளின் தன்னியக்கச் செயன்முறைகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்ற வேளையில், ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தொடர்பிலான பணி வழங்கலை மேம்படுத்துவதற்காக ஏனைய பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 07/2018இன் கீழ் ஓய்வூதியக் கொடுப்பனவு செயன்முறையின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன. இதன்படி, பெரிய நிறுவனங்களில் ஓய்வூதியப் பிரிவுகளை நிறுவுவதற்கும் அனைத்து அரச அலுவலகங்களிலுமுள்ள ஓய்வூதிய வயதினை அடைகின்ற அனைத்து அலுவலர்களுக்குமான தரவுத்தளங்கள் இதுவரை தயாரிக்கப்படாதிருப்பின் அவ்வனைத்து அலுவலர்களுக்கும் தரவுத்தளத்தினைத் தயாரிப்பதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. மேலும், சுற்றறிக்கை இல. 09/2015 (திருத்தம் III)இன் கீழ் ஓய்வூதியத் திணைக்களத்தின் தன்னியக்கச் செயன்முறையினை வலுப்படுத்தும் பொருட்டு 2018 யூன் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் அதேநேரக் கணனி முறைமையினூடாக மரண பணிக்கொடை கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 2018 யூன் 30இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் விதவைகள்/ விதுரர்கள் மற்றும் அநாதைகளுக்கான பங்களிப்புக்களுக்கான விபரங்களைச் சேகரிப்பதற்காக கணனிவழி அதேநேர முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. பொதுநிருவாகச் சுற்றறிக்கை இல.08/2018இன் கீழ் தீங்குபயக்கும் தொழில்நிலையொன்றில் ஈடுபட்டிருக்கும் பொழுது அந்நோயின் காரணமாக அலுவலர்கள் அல்லது அலுவலர்சார் கடமையில் ஈடுபட்டிருக்கும் போது அலுவலர் ஒருவர் மரணமடையுமிடத்து அவ்வலுவலர் நிரந்தரப் பதவியை அல்லது ஓய்வூதியம் பெறும் பதவியொன்றினை வகித்திருந்தாரா என்பதனை கருத்தில் கொள்ளாது அம்மரணமடைந்த அரச ஊழியர்களில் தங்கியிருப்பவர்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கான தீர்மானமொன்று எடுக்கப்பட்டது.

- **இறை வசதிகளின் கிடைப்பனவு மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தமைக்கிடையிலும் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் அரசாங்கம் அதன் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை மேற்கொண்டது.** இதன்படி, நாட்டின் போக்குவரத்து வலையமைப்பினை மேம்படுத்தும் நோக்குடனும் போக்குவரத்து நெரிசல்களைத் தணிக்கும் பொருட்டும் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் அரசாங்கம் வீதிக் கட்டுமானம், புனரமைப்பு மற்றும் நிலக் கொள்வனவில் முதலீடுகளை மேற்கொண்டது. மொறகஹகந்தவில்1[1] பல்நோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டம் 2018 சனவரியில் பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்ட வேளையில் வடக்கு, வடமத்திய, வடமேற்கு, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள வேளாண்மை நடவடிக்கைகளைத் தரப்படுத்தும் நோக்குடன் நீர்தேக்கத்திற்கு நீரை நிரப்பும் வேலைகள் 2018 யூலையில் ஆரம்பமாகின. 2018ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் கல்வித் துறையிலுள்ள உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது “அண்மையிலுள்ள பாடசாலை மிகச் சிறந்த பாடசாலை” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மனிதவளங்களையும் பௌதீக உட்கட்டமைப்பினையும் அபிவிருத்தி செய்வதனை நோக்கி வழிப்படுத்தப்பட்ட வேளையில், வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் புனரமைப்புச் செய்யப்பட்டன. அதேவேளை, இவ்வாண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இரண்டு புதிய தேசிய பாடசாலைகளின் கட்டுமானம் குருணாகலையிலும் பொலநறுவையிலும் ஆரம்பமாகின. அரச தனியார் பங்குடமைகளுக்கான தேசிய முகவராண்மை அரச தனியார் பங்குடமைக்கான தேசிய முகவராண்மைக்கான சட்டமொன்றினை வரைவதில் ஈடுபட்டிருந்த வேளையில் நாட்டின் உட்கட்டமைப்புத் தேவைப்பாடுகளை வலியுறுத்தும் விதத்தில் தேசிய உபாயமொன்றாக அரச தனியார் பங்குடமையினை ஊக்குவிக்கும் நோக்குடன் நிதி அமைச்சின் ஆலோசனையுடன் அரச தனியார் பங்குடமைகளுக்கான வழிகாட்டல்களை மீளாய்வு செய்து இறுதிப்படுத்தியது.

- **சமூக ரீதியாகப் பாதிக்கப்படக்கூடிய தொகுதியினருக்காக நலன்புரிச் நிகழ்ச்சித்திட்டங்களில் அரசாங்கம் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்த வேளையில் உதவுதொகைகளை ஒழுங்குபடுத்துவதற்காக சில வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** இலங்கையிலுள்ள முக்கிய நலன்புரித் திட்டங்கள் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம், வளமாக்கி உதவுதொகை, 70

1 காலஞ்சென்ற முனைவர் ஏ.என்.எஸ் குலசிங்கவின் ஞாபகார்த்தமாக மொறகஹந்த நீர்த்தேக்கம் “குலசிங்க நீர்த்தேக்கம்” என மீளப்பெயரிடப்பட்டது.

6

வயதிற்கு மேற்பட்ட வயது முதிர்ந்தோருக்கான நிதியியல் உதவி, குறைந்த வருமானமுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி, சிறுநீரக நோயாளிகளுக்கான நிதியியல் உதவி, ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மாணவர்களுக்கான இலவச பாடப்புத்தகங்கள் மற்றும் இலவச பருவகாலச் சீட்டுக்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்தினை மேம்படுத்தும் நோக்குடன் கர்ப்பிணித் தாய்மார்களுக்காக ஊட்டச்சத்துப் பொதி, திறிபோசா நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பாடசாலை ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டம் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வாண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியிலும் தொடர்ந்தன. நலன்புரி நன்மைகள் திட்டங்கள் தொடர்ந்தும் வழங்கப்படுகின்ற வேளையில், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தும் பொருட்டு ஐம்பது மாதிரிக் கிராமங்களை உருவாக்க எதிர்பார்க்கிறது. இதற்கமைய, சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் மாதிரிக் கிராமங்களை நிறுவுவதற்கான பொருத்தமான அமைவிடங்களை அடையாளம் கண்டிருப்பதுடன், இம்மாதிரிக் கிராமங்களில் முன்னுரிமைச் செயற்றிட்டங்கள் நடைமுறைக்கிடப்படும். தேவையான சட்டக் கட்டமைப்பினையும் இலங்கையில் அனைத்து நலன்புரி நன்மைகள் தொடர்பான வெளிப்படையான தெரிவு செய்முறையினை வழங்குவதற்காகவும் நிறுவப்பட்ட நலன்புரி நன்மைகள் சபையானது நலன்புரி நன்மைகள் சட்டம் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு 2018இல் அமைச்சரவைக்கு இச்சட்டத்தின் கீழ் வரைவு ஒழுங்குவிதிகளை சமர்ப்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஒருங்கிணைக்கப்பட்டசமூக பதிவகத் தகவல் முறைமை[2] 2018இல் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில், ஆரம்பத்தில் நான்கு முக்கிய நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக[3] நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் வரையப்படும். அதேவேளை 2018 மாச்சில், வளமாக்கி உதவுதொகைத் திட்டத்தின் காசுக் கொடை நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பொழுது எழுகின்ற பிரச்சனைகளைத் தவிர்ப்பதற்காக இக்காசுக் கொடைத் திட்டம் முடிவுறுத்தப்பட்டு அதற்குப் பதிலாக வேளாண்மையாளர்களுக்கு வளமாக்கியை வழங்கும் திட்டம் அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி, 2018 சிறுபோகத்திலிருந்து ஒப்புதலளிக்கப்பட்ட வளமாக்கித் தொகையாக 50 கி.கிறாம் பொதியொன்று ரூ.500 சலுகை விலையில் நெல்லிற்கும் மற்றைய பயிர்களைப் பொறுத்தவரை 50 கி.கிறாம் பொதியொன்று ரூ.1,500 இற்கும் (உருளைக்கிழங்கு, வெங்காயம், குடமிளகாய், சோளம் மற்றும் சோயா) வழங்கப்பட்டன.

- **மத்திய அரசின் வரவு செலவுத்திட்டம் மீதான சுமையினைக் குறைக்கும் பொருட்டு முக்கிய அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளின் நிதியியல் நிலைமைகளையும் தொழிற்பாடுகளையும் வலுப்படுத்துவதற்காக 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் பல முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.** இதன்படி, 2017 மாச்சில் கம்பனி நோக்க அறிக்கையில் கையொப்பமிட்ட ஐந்து[4] அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் 2017இன் முதலரைப்பகுதிக்கான செயலாற்ற அறிக்கைகள் 2018 மேயில் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மேலும், மற்றொரு பத்து அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளான நகர அபிவிருத்தி அதிகாரசபை, அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், அரச மரக் கூட்டுத்தாபனம், மில்கோ, தேசிய விலங்கு வளர்ப்பு அபிவிருத்திச் சபை, மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம், லங்கா சதோசா லிமிடெட், புவிச்சரிதவியல் அளவீட்டு மற்றும் சுரங்கமகழ்வுப் பணியகம் மற்றும் குருநாகல் பிளாண்டேஷன் லிமிடெட் என்பனவற்றின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக கம்பனி நோக்க அறிக்கைகளில் கையொப்பமிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு தன்னியக்க எரிபொருள் விலையிடல் பொறிமுறையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்காக 2018 மேயில் அமைச்சரவையின் ஒப்புதல் வழங்கப்பட்ட வேளையில் பெற்றோலிய விலையிடலில் வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, எரிபொருள் விலைகளை மீண்டும் செலவு அறவிடல் மட்டங்களுக்கு இசைவாகக் கொண்டு வருவதற்காக மாதாந்த அடிப்படையில் 2018 மேயிலிருந்து சூத்திரமொன்றினை அடிப்படையாகக் கொண்ட விலைச் சீராக்கங்கள் நடைமுறைக்கு வந்தன. மேலும், இலங்கை மின்சபையின் நிதியியல் செயலாற்றத்தினையும் வெளிப்படைத்தன்மையினையும் மேம்படுத்தும் பொருட்டு 2018 இறுதியில் மின்வலுவிற்காக


6

2 சமூகப் பதிவகத் தகவல் முறைமை என்பது இலத்திரனியல் தரவுத் தளமொன்றாகும். இது வேறுபட்ட நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களிலுள்ள நலன்புரி நன்மைபெறுநர்களின் தரவுகளை முக்கியமாக நலன்புரி நன்மைபெறுநர்களின் தெரிவு மற்றும் கொடுப்பனவிற்காகச் சேமித்து வைக்கிறது.

3 சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம், 70 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கான நிதியியல் உதவி, குறைந்த வருமானமுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான ஆதரவு மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான நிதியியல் உதவி.

4 இலங்கை மின்சாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, எயார்போட் அன்ட் ஏவியேஷன் சேர்விஸஸ் (சிறிலங்கா) லிமிடெட் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை.

வரைபடம் 6.1
இலங்கையின் இறை அமைப்பு - 2018 சனவரி-ஓகத்து (ரூ.பில்லியன்)




தன்னியக்கக் விலையிடல் பொறிமுறையொன்றிற்காக அமைச்சரவையின் ஒப்புதலைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கமைய மின்வலுவிற்கான தன்னியக்கப் விலையிடல் பொறிமுறையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கான முன்நிபந்தனையாக 2018 மேயில் தொகை வடிவிலான நிரம்பல் கொடுக்கல்வாங்கல் கணக்கொன்று நிறுவப்பட்டது.

- **முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவ உபாயமொன்றினை நடைமுறைக்கிடும் பொருட்டு தீவிரப் பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் இயற்றப்பட்டதுடன் நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ உபாயம் 2019 - 2023 காலப்பகுதிக்காக பின்பற்றப்படும்.** அரச படுகடன் முகாமைத்துவம் 2018இன் 8ஆம் இலக்க தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தினூடாக மேலும் வலுப்படுத்தப்பட்டது. 2018 மார்ச்சில் பாராளுமன்றம் தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தினை நிறைவேற்றியமையானது அரசாங்கம் அதன் பொதுப்படுகடனை நாட்டிற்கான பன்னாட்டு முறிக்கான உரிய காலத்திற்கு முன்னமேயே நிதியிடல் தேவைப்பாடுகளை கவனத்தில் கொள்வதன் மூலம் முன்கூட்டியே அதன் அரச படுகடனை முகாமைப்படுத்துவதற்கும் திறைசேரி முறிகளின் முதிர்ச்சி அமைப்பினை நீடித்துக் கொள்ளவும் எதிர்கால வர்த்தகப் படுகடன்களை முகாமைப்படுத்துவதற்கு கூடியளவு வசதிகளை வழங்கும் நோக்குடன் திறைசேரி முறி கூப்பன் கொடுப்பனவுகளை சுமுகப்படுத்துவதற்கும் அரச படுகடன் இருப்பின் அடிப்படை இடர் நேர்வுத் தோற்றப்பாட்டினை மேம்படுத்துவதற்கும் அரசாங்கத்தினை இயலுமைப்படுத்தியது. நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ உபாயம் அரச செலவுத்திட்டத் தேவைகள் சாத்தியமானளவிற்குக் குறைந்த செலவில் நிதியிடப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் படுகடன் சாதனங்களை பொருத்தமான உள்ளமைப்பொன்றில் கட்டியெழுப்புவதன் மீது முக்கியமாகக் கவனத்தினைச் செலுத்துகின்ற வேளையில் படுகடன் சொத்துப்பட்டியலின் இடர்நேர்வினை முன்மதியுடைய மட்டங்களில் முகாமைப்படுத்துகின்றது.

- **அரசாங்கம் பன்னிரண்டாவது நாட்டிற்கான பன்னாட்டு முறையினை 2018 ஏப்பிறலில் வெற்றிகரமாக வழங்கியது.** இந்த ஐ.அ.டொலர் 2.5 பில்லியனைக் கொண்ட முறியானது 2007 இற்குப் பின்னர் இலங்கையினால் முன்னொரு போதும் முன்வைக்கப்படாத மிகப் பெரும் கரைகடந்த முறியாகும். இவ்வழங்கலானது 5.75 சதவீத விளைவுடன் 5 ஆண்டு முதிர்ச்சிகளைக் கொண்ட 1.25 பில்லியன் ஐ.அ.டொலரையும் 6.75 சதவீதம் கொண்ட 10 ஆண்டு முதிர்ச்சிகளைக் கொண்ட 1.25 பில்லியன் ஐ.அ.டொலரையும் உள்ளடக்கிய இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்கலை உள்ளடக்கியிருந்தது. மேலும், ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதி 2018 ஒத்தோபரில் பெறப்பட்டது.

- **இலங்கைக்கான நாட்டிற்கான கொடுகடன் தரமிடல்கள் 2018இல் நாட்டிற்கான பன்னாட்டு தரமிடல் முகவர்களினால் உறுதிப்படுத்தப்பட்டன.** இலங்கையின்

நீண்ட கால வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணய வழங்குநர் செலுத்தத் தவறும் தரமிடலை "உறுதியான தோற்றப்பாட்டுடன்" "பீ+" இல் 2018 பெப்புருவரி 06ஆம் நாளன்று பிட்ச்சை உறுதிப்படுத்தியதன் மூலம் இறைத்திரட்சி மேம்பட்டு வருவதனையும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நாணய நிலைப்பாடு பேணப்படுவதையும் எடுத்துக்காட்டியது. மூடி முதலீட்டுப் பணிகளும் 2018 யூலை 26ஆம் நாளன்று இலங்கையின் நாட்டிற்கான தரமிடலை "பீ1" இல் உறுதிப்படுத்தியதுடன் தோற்றப்பாட்டினை "எதிர்மறையில்" பேணியது. அதேவேளை, ஸ்ரான்டட் அன்ட் புவரின் நீண்ட காலத் தரமிடல் "பீ+" இல் நிலைபெற்றிருந்ததுடன் தோற்றப்பாடு "உறுதித்தன்மையில்" காணப்பட்டது. இது திட்டமிடப்பட்ட சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை முன்னேற்றம் கண்டிருப்பதனைப் பிரதிபலிக்கிறது. இது, மிதமான தலைக்குரிய வருமான மட்டங்கள் மற்றும் பல இதையொத்த தரமிடப்பட்ட நாடுகளுடன் தொடர்பான வலுவான நிறுவனங்கள் என்பனவற்றுடன் சேர்ந்த வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குத் தாங்கிருப்பினைக் கட்டியெழுப்புவதனை உள்ளடக்கிய முன்னரே தீர்மானிக்கப்பட்ட சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தினை நிறைவேற்றுவதில் இலங்கையின் முன்னேற்றத்தினைப் பிரதிபலிக்கின்றது.


## அரச வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள்

### முக்கிய இறை நிலுவைகள்

- **நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை சிறிதளவு அதிகரித்த போதும் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் ஆரம்ப மீதி என்பன 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மேம்பட்ட செயலாற்றத்தினை எடுத்துக்காட்டின.** குறைந்த அரசிறைத் திரட்டல்களுக்கு மத்தியில் மொத்தச் செலவினத்திலும் தேறிய கடன்வழங்கலிலும் காணப்பட்ட குறைப்பு திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் ஆரம்ப மீதி ஆகிய இரண்டினதும் மேம்பட்ட செயலாற்றத்திற்குப் பங்களித்தன. இதன்படி, திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் மொ.உ.உற்பத்தியின் 4.0 சதவீதத்திலிருந்து மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியில் 3.5 சதவீதத்திற்கு மேம்பட்டது. அதேபோன்று பெயரளவு நியதிகளில் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2017இன் இதே காலப்பகுதியின் ரூ.520.2 பில்லியனிலிருந்து ரூ.510.9 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக ஆரம்ப மீதி (வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலாக திரண்ட பற்றாக்குறை) 2017இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.01 சதவீதம் கொண்ட (ரூ.1.6 பில்லியன்) பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஆய்விற்குரிய காலப்பகுதியில் 0.4 சதவீதம் கொண்ட (ரூ.57.6 பில்லியன்) மிகையினைப் பதிவுசெய்தது. இருப்பினும் கூட 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் அரசாங்கத்தின் குறைச் சேமிப்பினைப் பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2017இன் இதே காலப்பகுதியின் மொ.உ.உற்பத்தியின் 0.9 சதவீதத்திலிருந்து மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 1.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

வரைபடம் 6.2

முக்கிய இறைக் குறிகாட்டிகள்




*மூலம்:* நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

## அரசிறை மற்றும் கொடைகள்

### அரசிறை

- **2018ஆம் ஆண்டிற்கான வரவு செலவத்திட்ட மதிப்பீடுகளின்படி மொத்த அரச அரசிறை 2018இல் ரூ.2,217.2 பில்லியனுக்கு 21.1 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** இதன் விளைவாக 2018இல் மொ.உ.உற்பத்திக்கான மொத்த அரசிறை 15.6 சதவீதத்தில் மதிப்பிடப்பட்டதுடன் 14.3 சதவீதம் கொண்ட வரி அரசிறையினையும் 1.3 சதவீதம் கொண்ட வரியல்லா அரசிறையினையும் உள்ளடக்கியிருந்தது.

6

அட்டவணை 6.1

அரசிறையின் பொருளாதார பகுப்பாய்வு

ரூ. பில்லியன்

| விடயம் | 2016 | 2017 (அ) | 2018 ஏற்றுக் கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் | 2017 சன-ஓகத் (அ) | 2018 சன-ஓகத் (அ) |
|---|---|---|---|---|---|
| **வரி வருமானம்** | 1,463.7 | 1,670.2 | 2,034.0 | 1,094.9 | 1,133.7 |
| வருமான வரி | 258.9 | 274.6 | 370.0 | 171.0 | 195.9 |
| பெறுமதி சேர் வரி | 283.5 | 443.8 | 550.0 | 290.0 | 304.8 |
| கலால் வரிகள் | 455.0 | 469.5 | 535.0 | 312.5 | 335.2 |
| இறக்குமதித் தீர்வைகள் | 156.5 | 136.5 | 175.0 | 92.5 | 63.9 |
| துறைமுகங்கள் மற்றும் வானூர்தி தீர்வை | 88.8 | 102.4 | 115.0 | 65.6 | 73.4 |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரி | 57.4 | 69.0 | 87.0 | 45.0 | 46.8 |
| சிறப்புப் பண்டத் தீர்வை | 55.8 | 71.4 | 80.0 | 49.2 | 51.3 |
| செஸ் | 61.7 | 59.6 | 49.5 | 39.5 | 35.0 |
| ஏனைய வரிகள் | 46.1 | 43.5 | 72.5 | 29.5 | 27.4 |
| **வரி அல்லா வருமானம்** | **222.4** | **161.4** | **183.2** | **77.4** | **108.6** |
| **மொத்த வருமானம்** | **1,686.1** | **1,831.5** | **2,217.2** | **1,172.4** | **1,242.2** |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச அரசிறை 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 9.0 சதவீதத்திலிருந்து 8.6 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்து குறைந்த வரி அரசிறையினைப் பிரதிபலித்தது.** எனினும், 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் மொத்த அரச அரசிறை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் ரூ.1,172.4 பில்லியனிலிருந்து ரூ.1242.2 பில்லியனுக்கு 6.0 சதவீதத்தினால் அதிகரித்தது. மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச வரி அரசிறை முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியின் 8.4 சதவீதத்திலிருந்து 7.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த போதும் பெயரளவு நியதிகளில் இது ரூ.1,133.7 பில்லியனுக்கு 3.5 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு வருமான வரிகள் உந்து ஊர்திகள், புகையிலை மற்றும் சிகரெட் மீதான கலால் தீர்வை, பெறுமதிசேர் வரி, துறைமுகம் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வை மற்றும் சிறப்புப் பண்டத் தீர்வை என்பனவற்றிலிருந்தான அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரியல்லா அரசிறை 2017இன் இதே காலப்பகுதியின் 0.6 சதவீதத்திலிருந்து 0.7 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் பெயரளவு நியதிகளில் இது ரூ.108.6 பில்லியனுக்கு 40.2 சதவீதத்தினால் அதிகரித்தது. மத்திய வங்கியின் இலாப மாற்றல்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளிலிருந்தான இலாபம் மற்றும் பங்கிலாப மாற்றல்களில் ஏற்பட்ட குறிப்பிட்டத்தக்க அதிகரிப்பு என்பன கட்டணம் மற்றும் விதிப்புக்களிலிருந்தான அதிகரித்த பெறுகைகளுடன் சேர்ந்து வரியல்லா அரசிறையின் அதிகரிப்பிற்குப் பங்களித்தன. ஒட்டுமொத்தமாக, இக்காலப்பகுதியில் மொத்த அரசிறைச் சேகரிப்புக்கள் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 58.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ரூ.2,217.2 பில்லியன் கொண்ட ஆண்டு மதிப்பீட்டில் 56.0 சதவீதமாகக் காணப்பட்டது. மேலும், இக்காலப்பகுதியில் அடையப்பட்ட சராசரி மாதாந்த அரசிறை 2018இற்கான வரவு செலவுத்திட்டத்தில் எறிவு செய்யப்பட்ட ரூ.184.8 பில்லியன் கொண்ட சராசரி மாதாந்த அரசிறையுடன் ஒப்பிடுகையில் ரூ.155.3 பில்லியனாக மதிப்பிடப்பட்டது.

- **பெயரளவு நியதிகளில் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வருமான வரிகளிலிருந்தான அரசிறை ரூ.195.9 பில்லியனுக்கு 14.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு கம்பனி மற்றும் கம்பனியல்லா வருமான வரிகள், உழைக்கும் போதே செலுத்தும் வரி மற்றும் பொருளாதாரப் பணிக் கட்டணங்கள் என்பனவற்றிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.** 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வருமான வரியிலிருந்தான அரசிறை 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 1.3 சதவீதத்திலிருந்து 1.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் கம்பனி மற்றும் கம்பனியல்லா வருமான வரிகள், பெயரளவு நியதிகளில் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.81.2 பில்லியனிலிருந்து ரூ.99.0 பில்லியனுக்கு 21.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2018 ஏப்பிறல் 1 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமையும் உள்நாட்டு அரசிறைத் திணைக்களத்தில் கொடுப்பனவு மற்றும் திரும்பல்களின் கண்காணிப்புச் செயன்முறை வலுப்படுத்தப்பட்டமையுமே முக்கிய காரணமாகும். அதேவேளை, 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் உழைக்கும் போதே செலுத்தும் வரியிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியின் ரூ.22.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.27.8 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு உழைக்கும் போதே செலுத்தும் வரிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்புக்களுடன் தொடர்பான கண்காணிப்புச் செயன்முறைகளிலும் அரச நிருவாக முகாமைத்துவத் தகவல் முறைமையின் ஆரம்பத்துடன் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட மேம்பாடுகளுமே முக்கிய காரணமாகும். ஆய்விற்குரிய காலப்பகுதியில் பொருளாதாரப் பணிக் கட்டணங்களிலிருந்தான அரசிறை 2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியின் ரூ.31.2 பில்லியனிலிருந்து ரூ.38.2 பில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், 2018 ஏப்பிறல் 01 இலிருந்து


6

நடைமுறைக்குவரும் விதத்தில் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் வட்டி வருமானத்தின் மீதான பிடித்துவைத்தல் வரி நீக்கப்பட்டதன் விளைவாக இக்காலப்பகுதியில் பிடித்துவைத்தல் வரியிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டின் ரூ.36.2 பில்லியனிலிருந்து ரூ.30.9 பில்லியனுக்கு 14.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை 5.1 சதவீதத்தினால் அதிகரித்த போதும் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக பெறுமதிசேர் வரி அரசிறை 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 2.2 சதவீதத்திலிருந்து 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 2.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் மீதான பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியின் ரூ.181.4 பில்லியனிலிருந்து ரூ.191.1 பில்லியனுக்கு 5.3 சதவீதத்தினால் அதிகரித்தது. இறக்குமதி தொடர்பான நடவடிக்கைகள் மீதான பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறையும் 2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.108.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.113.7 பில்லியனுக்கு 4.6 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மொத்த வரி அரசிறையின் சதவீதமாக பெறுமதிசேர் வரி அரசிறை 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 26.5 சதவீதத்திலிருந்து 26.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மொத்த அரசிறைக்கான பெறுமதிசேர் வரி அரசிறையின் பங்களிப்பு 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 24.7 சதவீதத்திலிருந்து 24.5 சதவீதத்திற்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக கலால் தீர்வைகளிலிருந்தான அரசிறை 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 2.4 சதவீதத்திலிருந்து 2.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** எனினும், பெயரளவு நியதிகளில் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் கலால் தீர்வையிலிருந்தான அரசிறை 2017இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.312.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.335.2 பில்லியனுக்கு 7.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான அரசிறை வீழ்ச்சியடைந்தமைக்கிடையிலும் உந்து ஊர்திகள்,

வரைபடம் 6.3
அரசிறையின் உள்ளடக்கம்
(சன-ஓகத் 2018)




*மூலம்:* நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

புகையிலை மற்றும் சிகரெட் மற்றும் குடிவகை என்பனவற்றிலிருந்தான கலால் தீர்வை அரசிறை அதிகரித்தமையே காரணமாகும். உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை ரூ.148.6 பில்லியன் கொண்ட தொகையை உருவாக்கி 14.8 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியை பதிவுசெய்தமைக்கு 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் அதிகரித்த உந்து ஊர்திகளின் இறக்குமதியே காரணமாகும். அதேவேளை, புகையிலை மற்றும் சிகரெட் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ.60.6 பில்லியனுக்கு 11.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2017 நவெம்பரில் சிகரெட் மீது விதிக்கப்பட்ட உயர்ந்த கலால் வரியே காரணமாகும். குடிவகையிலிருந்த கலால் வரி அரசிறை 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.73.7 பில்லியன் கொண்ட தொகையுடன் ஒப்பிடுகையில் ரூ.75.3 பில்லியனுக்கு 2.3 சதவீதத்தினால் உயர்வடைந்தது. எனினும், 2018இன் முதலரைப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான அரசிறை 2017இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூ.50.1 பில்லியனிலிருந்து ரூ.45.0 பில்லியனுக்கு 10.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இக்காலப்பகுதியில் டீசல் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும்.

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இறக்குமதித் தீர்வைகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் 2017இன் தொடர்பான காலப்பகுதியில்**

6

**பதிவு செய்யப்பட்ட 0.7 சதவீதத்திலிருந்து 0.4 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்த வேளையில் சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்தான வரிகள் சதவீதமாக எவ்வித மாற்றமுமின்றி 0.4 சதவீதத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது.** இதன்படி, இறக்குமதித் தீர்வைகளிலிருந்தான அரசிறை 2017இன் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட ரூ.92.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.63.9 பில்லியனுக்கு 30.9 சதவீதத்தினால் கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு பெற்றோல், டீசல் மற்றும் பால்மா என்பனவற்றிற்கு ஏற்புடைத்தான தீர்வை வீதங்களில் ஏற்பட்ட குறைப்பே முக்கிய காரணமாகும். சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதிக்குரிய ரூ.49.2 பில்லியனிலிருந்து ரூ.51.3 பில்லியனுக்கு 4.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்கும் உள்நாட்டு வேளாண்மைச் சமூகத்தினரின் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதற்காகவும் பல பண்டங்களின் மீது உயர்ந்த தீர்வைகள் விதிக்கப்பட்டமையே காரணமாகும்.

- **பெயரளவு நியதிகளில் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் துறைமுகங்கள் வானூர்திநிலையத் அபிவிருத்தித் தீர்வை என்பனவற்றிலிருந்தான அரசிறை அதிகரித்த வேளையில் செஸ் தீர்வையிலிருந்தான திரட்டப்பட்ட அரசிறை இக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது.** தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறை பெயரளவு நியதிகளில் ரூ.46.8 பில்லியனுக்கு 4.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் இறக்குமதிகளுடன் தொடர்பான நடவடிக்கைகள் ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும். எனினும், மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறை 2017இன் தொடர்பான காலப்பகுதியினைப் போன்றே 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியிலும் 0.3 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறை 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ரூ.33.9 பில்லியனுக்கு 4.0 சதவீதத்தினால் அதிகரித்தது. இறக்குமதி தொடர்பான நடவடிக்கைகளிலிருந்து தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் அரசிறைச் சேகரிப்பு 2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ரூ.12.4 பில்லியனிலிருந்து 12.9 பில்லியனுக்கு 4.0 சதவீதத்தினால் அதிகரித்தது. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் துறைமுகங்கள் வானூர்திநிலையங்கள் அபிவிருத்தித் தீர்வையிலிருந்தான அரசிறை ரூ.73.4 பில்லியனுக்கு 11.9 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், செஸ் தீர்வையிலிருந்தான அரசிறை 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 2017இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.39.5 பில்லியனிலிருந்து ரூ.35.0 பில்லியனுக்கு 11.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பல பொருட்களின் இறக்குமதி மீது ஏற்புடைத்தான எதிர்த் தீர்வைகளை கட்டம் கட்டமாக அகற்றும் நோக்குடன் 2018இன் வரவு செலவுத்திட்டத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 253 விடயங்கள் மீதான செஸ் தீர்வை அகற்றப்பட்டமையே காரணமாகும்.

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வரியல்லா அரசிறை 2017இன் இதே காலப்பகுதியில் 0.6 சதவீதத்திலிருந்து மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 0.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.** இதன்படி, பெயரளவு நியதிகளில் வரியல்லா அரசிறை 2017இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட ரூ.77.4 பில்லியனிலிருந்து ரூ.108.6 பில்லியனுக்கு 40.2 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பிற்கு மத்திய வங்கியின் இலாப மாற்றல்கள், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலிருந்தான உயர்ந்த இலாபம் மற்றும் பங்கிலாப மாற்றல்கள் மற்றும் கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களிலிருந்தான அதிகரித்த அரசிறை என்பன பெருமளவிற்குக் காரணமாக அமைந்தன. 2018இன் முதல் எட்டு மாதங்களில் மத்திய வங்கியின் இலாப மாற்றல்களினால் திரட்டப்பட்ட அரசிறை ரூ.14.2 பில்லியனாகவிருந்தது. மேலும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலிருந்தான இலாபம் மற்றும் பங்கிலாப மாற்றல்கள் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.12.5 பில்லியனிலிருந்து ஆய்விற்குரிய காலப்பகுதியில் 58.9 சதவீதத்தினால் ரூ.19.8 பில்லியனுக்குக் கணிசமானளவு அதிகரித்தது. அதேவேளை, இக்காலப்பகுதியில் கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களிலிருந்தான அரசிறை 2017இன் தொடர்பான காலப்பகுதியில் ரூ.41.6 பில்லியனிலிருந்து ரூ.47.0 பில்லியனுக்கு 13.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2018 வரவு செலவுத்திட்டத்தில் கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களுக்குச் செய்யப்பட்ட மேல் நோக்கிய திருத்தங்களே காரணமாகும். மேலும், சமூக பாதுகாப்புப் பங்களிப்புக்களிலிருந்தான அரசிறை ஆய்விற்குரிய காலப்பகுதியில் ரூ.16.5 பில்லியனுக்கு 7.7 சதவீதத்தினால் அதிகரித்தன. வட்டி வருமானங்களிலிருந்தான வரியல்லா அரசிறையும் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ரூ.5.4 பில்லியனுக்கு 27.9 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் வாடகை வருமானத்திலிருந்தான வரியல்லா

6

அரசிறை 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ரூ.2.2 பில்லியனுக்கு 12.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

### கொடைகள்

- **வெளிநாட்டுக் கொடைகளின் பகிர்ந்தளிப்பு 2018இற்கான வருடாந்த கொடைகளின் மதிப்பீடான ரூ.10.0 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ரூ.5.1 பில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.** எனினும், 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வெளிநாட்டுக் கொடைகள் 2017இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.2.3 பில்லியனிலும் உயர்வாகவே காணப்பட்டன.

### செலவினமும் தேறிய கடன்வழங்கலும்

- **2018இற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின்படி மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2017இன் மொ.உ.உற்பத்தியின் 19.3 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 20.4 சதவீதத்திற்கு அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.** மீண்டெழும் செலவினம் 2017இன் 14.5 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 15.2 சதவீதத்திற்கு அதிகரிக்குமென மதிப்பிடப்பட்ட வேளையில் மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 4.8 சதவீதத்திலிருந்து 2018இல் மொ.உ.உற்பத்தியில் 5.3 சதவீதத்திற்கு அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. பெயரளவு நியதிகளில் 2018இல் மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2017இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.2,573.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.2,902.2 பில்லியனுக்கு 12.8 சதவீதத்தினால் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. மீண்டெழும் செலவினம் 2018இல் ரூ.2,152.0 பில்லியனுக்கு 11.6 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் ரூ.750.2 பில்லியனுக்கு 16.2 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 13.0 சதவீதத்திலிருந்து மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 12.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கல் ஆகிய இரண்டும் மெதுவடைந்தமையே காரணமாகும்.**

அட்டவணை 6.2
செலவினத்தின் பொருளாதாரப் பகுப்பாய்வு

ரூ. பில்லியன்

| விடயம் | 2016 | 2017 (அ) | 2018 ஏற்றுக் கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் | 2017 சன-ஓகத் (அ) | 2018 சன-ஓகத் (அ) |
|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **1,757.8** | **1,927.7** | **2,152.0** | **1,294.4** | **1,384.6** |
| இதில், சம்பளங்களும் கூலிகளும் | 576.5 | 588.5 | 630.0 | 392.5 | 425.3 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 610.9 | 735.6 | 820.0 | 518.6 | 568.5 |
| வெளிநாட்டு | 126.7 | 164.9 | 170.0 | 97.6 | 117.1 |
| உள்நாட்டு | 484.2 | 570.6 | 650.0 | 421.0 | 451.3 |
| சமுர்தி | 40.7 | 39.7 | 44.0 | 26.6 | 26.2 |
| ஓய்வூதியங்கள் | 171.9 | 181.1 | 197.7 | 120.3 | 127.6 |
| வளமாக்கி மானியம் | 27.8 | 30.4 | 32.0 | 16.8 | 13.3 |
| **மூலதனம் மற்றும் தேறிய கடன்** | **576.1** | **645.4** | **750.2** | **400.5** | **373.7** |
| **மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **2,333.9** | **2,573.1** | **2,902.2** | **1,694.9** | **1,758.2** |

(அ) தற்காலிகமானது


*மூலம்:* நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

எனினும், பெயரளவு நியதிகளில் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் அரச செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.1,694.9 பில்லியனிலிருந்து ரூ.1,758.2 பில்லியனுக்கு 3.7 சதவீதத்தினால் அதிகரித்தது. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியின் 64.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இற்கான ஆண்டு மதிப்பீடுகளின் 60.6 சதவீதத்திற்கு வகைகூறின.

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் 2017இன் இதே காலப்பகுதியின் 10.0 சதவீதத்திலிருந்து 9.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு உதவுதொகைகள், மாற்றல்கள் மற்றும் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட குறைப்பே முக்கிய காரணமாகும்.** பெயரளவு நியதிகளில் மீண்டெழும் செலவினம் 2017இன் இதே காலப்பகுதியின் ரூ.1,294.4 பில்லியனிலிருந்து 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ரூ.1,384.6 பில்லியனுக்கு 7.0 சதவீதத்தினால் அதிகரித்தது. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் வட்டிக் கொடுப்பனவின் மீதான செலவினம் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.518.6 பில்லியனிலிருந்து ரூ.568.5 பில்லியனுக்கு 9.6 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு பன்னாட்டு சந்தைகளில் காணப்பட்ட ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வட்டி வீதங்களே முக்கிய காரணமாகும். வட்டி வீதங்களில் ஏற்பட்ட உயர்வு, வேறுபட்ட வட்டி வீதங்களில் பெறப்பட்ட

வரைபடம் 6.4

அரச செலவினத்தின் உள்ளடக்கம் (சன-ஓகத் 2018)




*மூலம்:* நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

கடன்களின் வட்டிக் கொடுப்பனவுகளை மோசமாகப் பாதித்தன. மேலும், உயர்ந்த படுகடன் இருப்பு குறிப்பாக, நாட்டிற்கான பன்னாட்டு முறி போன்ற வெளிநிற்கும் வர்த்தகக் கடன்களில் அதிகரிப்பும் வட்டிக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் உயர்வடைவதற்குப் பங்களித்தன. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2017இன் இதே காலப்பகுதியில் 3.0 சதவீதத்திலிருந்து 2.9 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்த போதும் பெயரளவு நியதிகளில் சம்பளங்களும் கூலிகளும் ரூ.425.3 பில்லியனுக்கு 8.3 சதவீதத்தினால் அதிகரித்தன. மேலும், மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உதவுதொகைகள் மற்றும் மாற்றல்கள் மீதான செலவினம் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 2.2 சதவீதத்திலிருந்து 2.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு வளமாக்கி உதவுதொகை, அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மாற்றல்கள் என்பன மீதான செலவினத்தில் ஏற்பட்ட குறைப்பே முக்கிய காரணமாக அமைந்தது. எனினும், பெயரளவு நியதிகளில் உதவுதொகைகள் மற்றும் மாற்றல்கள் மீதான செலவினம் முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.291.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.306.3 பில்லியனுக்கு 5.2 சதவீதத்தினால் அதிகரித்தது. ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் ரூ.127.6 பில்லியனுக்கு 6.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இக்காலப்பகுதியில் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் பெயரளவு நியதிகளிலும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்தன.** இதன்படி, மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2018இன் முதல் எட்டு காலப்பகுதியில் மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் மொ.உ.உற்பத்தியின் 3.1 சதவீதத்திலிருந்து 2.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் பெயரளவு நியதிகளில் மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் ரூ.373.7 பில்லியனுக்கு 6.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் அடையப்பட்ட மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 57.3 சதவீதம் கொண்ட பங்குடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 49.8 சதவீதத்திற்கு வகைகூறியது.

## வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் நிதியிடல்

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு வெளிநாட்டு மூலங்களினூடாக பெருமளவிற்கு நிதியிடப்பட்டது.** இதன்படி, தேறிய வெளிநாட்டு நிதியிடல் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.246.7 பில்லியனிலிருந்து ரூ.271.3 பில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, தேறிய உள்நாட்டு நிதியிடல் 2017இன் இதே காலப்பகுதியின் ரூ.273.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் ரூ.239.5 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

- **வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கான உள்நாட்டுக் கடன்பாடுகள் முக்கியமாக வங்கியல்லாத் துறையிலிருந்து பெறப்பட்டமையின் காரணமாக வங்கித்தொழில் துறையின் மீது தங்கியிருப்பது குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்தது.** இதன்படி, உள்நாட்டுத் வங்கித்தொழில் அல்லாத் துறையிலிருந்தான தேறிய நிதியிடல் 2017இன் இதே காலப்பகுதிக்குரிய ரூ.37.0 பில்லியனிலிருந்து ரூ.210.9 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. இது அரசு தனியார் பங்குடமையொன்றாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை தொழிற்படுத்துவதற்கு 2017இல் வெளிநாட்டு முதலீட்டாளருடன் கையெழுத்திடப்பட்ட சலுகை ரீதியான உடன்படிக்கையூடாகப் பெறப்பட்ட அம்பாந்தோட்டைத் துறைமுகத்திலிருந்தான ரூ.41.3 பில்லியன் கொண்ட விற்பனைப் பெறுகைகளையும்

6

அட்டவணை 6.3

நிதியீட்டல் மூலங்கள்

ரூ. பில்லியன்

| விடயம் | 2016 | 2017 (அ) | 2017 சன-ஓகத் (அ) | 2018 சன-ஓகத் (அ) |
|---|---|---|---|---|
| உள்நாட்டு நிதியிடல் (ஆ) | 248.4 | 294.3 | 273.5 | 239.5 |
| வங்கி | 140.0 | 187.7 | 236.5 | 28.6 |
| வங்கியல்லா | 108.5 | 106.5 | 37.0 | 210.9 |
| **வெளிநாட்டு நிதியிடல்** | **391.9** | **439.2** | **246.7** | **271.3** |
| கடன்கள் | 109.3 | 0.8 | 15.1 | -10.8 |
| வர்த்தகக் கடன்கள் | 319.7 | 381.2 | 224.6 | 321.0 |
| திறைசேரி முறிகளின் மீது வதிவற்றோரின் முதலீடுகள் | -44.3 | 43.7 | 7.1 | -34.2 |
| திறைசேரி உண்டியல்களின் மீது வதிவற்றோரின் முதலீடுகள் | 7.2 | 13.6 | ... | -4.7 |
| **மொத்த நிதியிடல்** | **640.3** | **733.5** | **520.2** | **510.9** |

(அ) தற்காலிகமானது


*மூலங்கள்:* நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

உள்ளடக்குகிறது. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வங்கி நிதியிடல் 2017இன் இதே காலப்பகுதியின் ரூ.236.5 பில்லியனிலிருந்து 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ரூ.28.6 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கு திறைசேரி உண்டியல்கள் மூலமாக வர்த்தக வங்கிகளிலிருந்தான நிதியிடல் மூலங்கள் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவடைந்தமை மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் தொடர்பான மீள்கொடுப்பனவுகள் என்பன காரணமாகும். எனினும், மத்திய வங்கியிலிருந்தான நிதியிடல் 2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.119.5 பில்லியன் கொண்ட மீள்கொடுப்பனவுகளுக்கெதிராக 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ரூ.20.7 பில்லியனுக்கு அதிகரித்தது.

- **ஆய்விற்குரிய காலப்பகுதியில் உள்நாட்டுக் கடன்பாடுகள் முக்கியமாக படுகடன் சாதனங்களின் மூலமாக குறிப்பாக திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளிலிருந்து பெறப்பட்டன.** 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் திறைசேரி உண்டியல்களிலிருந்தான தேறிய கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.7.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.81.5 பில்லியனுக்கு அதிகரித்தன. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் திறைசேரி முறிகளிலிருந்தான தேறிய கடன்பாடுகள் 2017இன் இதே காலப்பகுதியின் ரூ.48.7 பில்லியனிலிருந்து ரூ.157.8 பில்லியனுக்கு அதிகரித்தன. அதேவேளை இலங்கை அபிவிருத்தி முறிகள் மூலமான கடன்பாடுகள் 2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியின் ரூ.53.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் ரூ.81.6 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவொன்றினைப் பதிவுசெய்தன.

வரைபடம் 6.5

பற்றாக்குறையின் நிதியிடல்




*மூலங்கள்:* நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கலுடன் வெளிநாட்டு நிதியிடல் அதிகரித்தது.** 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கான வெளிநாட்டுக் கடன்பாடுகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.246.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.271.3 பில்லியனுக்கு அதிகரித்தது. தேறிய வெளிநாட்டு நிதியிடலானது நாட்டிற்கான பன்னாட்டு முறிகளினூடான கடன்பாடுகள், வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன்கள் தொடர்பிலான தேறிய மீள்கொடுப்பனவுகள், வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதி மற்றும் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.


## அரச படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

### அரச படுகடன்

- **மத்திய அரச படுகடன் இருப்பு 2018 ஓகத்து இறுதியிலுள்ளவாறு ரூ.11,052.0 பில்லியனுக்கு ரூ.739.0 பில்லியனால் அதிகரித்தது.** இதன்படி, முதல் எட்டு மாத காலப்பகுதியில் உள்நாட்டுப் படுகடன் ரூ.5,776.3 பில்லியனுக்கு ரூ.181.9 பில்லியனால் அதிகரித்த வேளையில் வெளிநாட்டுப் படுகடன் ரூ.5,275.7 பில்லியனுக்கு ரூ.557.1 பில்லியனால் அதிகரித்தது. ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையும் முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையும் ரூபா நியதிகளில் படுகடன் இருப்பு அதிகரிப்பு அதிகரிப்பதற்குப் பங்களித்தது.

6

வரைபடம் 6.6
வெளிநின்ற அரச படுகடன்




*மூலம்:* நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

- **குறுங்கால உள்நாட்டுப் படுகடனின் பங்கு சிறிதளவால் அதிகரித்த வேளையில் நடுத்தர மற்றும் நீண்ட காலப் படுகடனின் பங்கு வீழ்ச்சியடைந்தது.** மொத்த உள்நாட்டுப் படுகடனில் குறுங்காலப் படுகடனின் பங்கு 2017 இறுதியின் 18.4 சதவீதத்திலிருந்து 2018 ஒகத்து இறுதியில் 19.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. மாறாக, மொத்த உள்நாட்டுப் படுகடனில் நடுத்தர மற்றும் நீண்ட காலப் படுகடனின் பங்கு 2017 இறுதியின் 81.6 சதவீதத்திலிருந்து 2018 ஒகத்து இறுதியில் 80.6 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. 2018 ஒகத்து இறுதியில் உள்நாட்டுப் படுகடனில் திறைசேரி உண்டியல்களின் பங்கு 2017 இறுதியில் 12.5 சதவீதத்திலிருந்து 13.4 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு வங்கித்தொழில் துறை வசமிருந்த திறைசேரி உண்டியல் உடமைகள் அதிகரித்தமையே காரணமாகும். எனினும் உள்நாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலில் மிகப் பாரிய பங்கினை உள்ளடக்கியிருக்கும் திறைசேரி முறிகள் அவற்றின் பங்கினை 2017 இறுதியின் 68.3 சதவீதத்திலிருந்து 2018 ஒகத்து இறுதியில் 68.0 சதவீதத்திற்கு சிறிதளவால் குறைத்துக் கொண்டது. மேலும், உள்நாட்டுப் படுகடன் இருப்பில் இலங்கை அபிவிருத்தி முறிகளின் பங்கு 2017 இறுதியில் 11.4 சதவீதத்திலிருந்து 2018 ஒகத்து இறுதியில் 10.2 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டமைக்கு ஆய்விற்குரிய காலப்பகுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல் தொடர்பில் உயர்ந்த இளைப்பாறல்கள் காணப்பட்டமையே காரணமாகும்.

- **வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் 2017 இறுதியின் ரூ.702.1 பில்லியனிலிருந்து (ஐ.அ.டொலர் 4,593.2 மில்லியன்) 2018 ஒகத்து இறுதியில் ரூ.690.5 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 4,517.8 மில்லியன்) சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.** இதன்படி, இலங்கை அபிவிருத்தி முறிகளின் படுகடன் இருப்பு ரூ.590.4 பில்லியனாக (ஐ.அ.டொலர் 3,862.8 மில்லியன்) விளங்கிய வேளையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் வெளிநின்ற படுகடன் 2018 ஒகத்து இறுதியில் ரூ.100.1 பில்லியனாக (ஐ.அ.டொலர் 655.0 மில்லியன்) விளங்கியது. மொத்த உள்நாட்டுப் படுகடனுக்கான வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடனின் பங்கு 2017 இறுதியின் 12.6 சதவீதத்திலிருந்து 2018 ஒகத்து இறுதியில் 12.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் 2018 ஒகத்து இறுதியில் ரூ.5,085.9 பில்லியனுக்கு ரூ.193.5 பில்லியனால் அதிகரித்தது.

- **வெளிநாட்டுப் படுகடனின் இருப்பில் சலுகையல்லாப் படுகடனின் பங்கு 2017 இறுதியின் 54.8 சதவீதத்திலிருந்து 2018 ஒகத்து இறுதியில் 58.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.** இதன்படி, மொத்த வெளிநாட்டுப் படுகடனின் பங்காக சலுகை ரீதியான வெளிநாட்டுப் படுகடன் 2017 இறுதியின் 45.2 சதவீதத்திலிருந்து 2018 ஒகத்து இறுதியில் 41.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சலுகையல்லாப் படுகடன் ரூ.3,078.2 பில்லியனுக்கு 18.9 சதவீதத்தினால்

அட்டவணை 6.4
வெளிநின்ற அரச படுகடன்

ரூ. பில்லியன்

| விடயம் | 2016 | 2017 (அ) | 2017 ஒகத் இறுதி (அ) | 2018 ஒகத் இறுதி (அ) |
|---|---|---|---|---|
| **உள்நாட்டு படுகடன் (ஆ)** | **5,341.5** | **5,594.4** | **5,659.4** | **5,776.3** |
| முதிர்ச்சி காலப்பகுதியின்படி | | | | |
| குறுங்காலம் | 968.4 | 1,031.2 | 1,135.0 | 1,117.8 |
| நடுத்தர மற்றும் நீண்டகாலம் | 4,373.1 | 4,563.2 | 4,524.4 | 4,658.6 |
| நிறுவனங்களின்படி | | | | |
| வங்கிகள் | 2,114.9 | 2,328.5 | 2,605.2 | 2,422.3 |
| வங்கியல்லாத்துறை | 3,226.6 | 3,265.9 | 3,054.3 | 3,354.0 |
| **வெளிநாட்டுப்படுகடன் (இ)** | **4,045.8** | **4,718.6** | **4,626.5** | **5,275.7** |
| சலுகைக் கடன்கள் | 1,897.7 | 2,130.5 | 2,061.0 | 2,197.5 |
| சலுகையல்லாக் கடன்கள் | 2,148.1 | 2,588.1 | 2,565.5 | 3,078.2 |
| **மொத்த அரச படுகடன்** | **9,387.3** | **10,313.0** | **10,285.9** | **11,052.0** |

*மூலங்கள்:* நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

(ஆ) (i) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வசமுள்ள ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள், (ii) 2012 சனவரியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு கொடுக்கப்பட வேண்டியவற்றைத் தீர்ப்பதற்காக வழங்கப்பட்ட ரூ. 78,447 மில்லியன் பெறுமதியுடைய அரச திறைசேரி முறிகள் நீங்கலாக. 2017 சனவரியில் சில முறிகளின் முதிர்ச்சியினால் 2017 சனவரி முதல் வெளிநின்ற தொகை ரூ. 56,662 மில்லியனாகும்.

(இ) ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் வெளிநின்ற பெறுமதிகள் உள்ளடங்கலாக.

6

அதிகரித்தமைக்கு 2018 ஏப்பிறலின் பன்னிரண்டாவது நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்கலே (ஐ.அ.டொலர் 2.5 பில்லியன்) முக்கிய காரணமாகும்.

### படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்


- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மொத்தமாக ரூ.1,511.8 பில்லியனாக விளங்கின.** இது கடன்தீர் நிதிக் கொடுப்பனவான ரூ.943.3 பில்லியனையும் (62.4 சதவீதம்) வட்டிக் கொடுப்பனவான ரூ.568.5 பில்லியனையும் (37.6 சதவீதம்) உள்ளடக்கியிருந்தது. மேலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களுக்கான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் முறையே ரூ.1,180.2 பில்லியனாகவும் ரூ.331.6 பில்லியனாகவும் காணப்பட்டன. 2018 ஓகத்து வரை மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் வருடாந்த படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளுக்கான ஆரம்ப வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் 76.7 சதவீதத்திற்கு வகைகூறின.

### எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **அரசாங்கத்தினதும் ஏனைய அனைத்துப் ஆர்வலர்களினதும் ஒருங்கிணைந்த முயற்சிகள் இல்லாமல் 2020 அளவில் மொ.உ.உற்பத்தியின் 3.5 சதவீதம் கொண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை இலக்குகளை நடுத்தர காலத்தில் எய்துவதும் 2021 அளவில் மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதத்தினை 69 சதவீதத்தில் பேணுவதும் மிகக் கடுமையான சவாலுக்குரிய விடயமாக இருக்கும்.** மிகப் பிந்திய கிடைக்கத்தக்கத் தகவல்களின்படி 2018இல் அரச அரசிறைச் சேகரிப்புக்கள் ஆரம்ப மதிப்பீடுகளிலும் பார்க்க குறைவாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு இறக்குமதித் தீர்வைகள் மற்றும் செஸ் தீர்வையிலிருந்தான குறைந்த அரசிறைச் சேகரிப்புக்களும் 2018 வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட அரசிறை முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் தாமதங்களும் முக்கிய காரணமாகும். மேலும், 2018இல் மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் மூலதனச்

வரைபடம் 6.7

அரச படுகடன் பணிக்கொடுப்பனவுகளும் அரசிறையும்




*மூலங்கள்:* நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கலில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியின் பெறுபெறாக ஆரம்ப மரிப்பீடுகளிலும் பார்க்க குறைவாகக் காணப்படும். அரச செலவினத்தில் வீழ்ச்சி காணப்பட்டமைக்கிடையிலும் அரசிறைச் சேகரிப்புக்களில் காணப்பட்ட விலகல்களின் முக்கிய காரணமாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை. மத்திய அரசாங்கத்தின் மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதமும் 2018 இறுதியில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றமைக்கு உயர்ந்த தேறிய படுகடன் நிதியிடல், முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக ரூபாவின் பெறுமானத் தேய்வு, குறைந்த பெயரளவிலான மொ.உ. உற்பத்தியின் வளர்ச்சி என்பன காரணங்களாக அமையும். ஆகவே, பொருளாதார வளர்ச்சியை எதிர்க்கணியமாக பாதிக்கக்கூடிய அவசியமான அரச முதலீடுகளைக் கட்டுப்படுத்தப்படுவதனை அல்லது பிற்போடப்படுவதனைத் தவிர்ப்பதற்கு கணிசமான அரசிறை வழிமுறைகள் தேவைப்படுகின்றன. மேலும் இச்சவால்கள் குறித்துரைக்கப்பட்ட நடுத்தர கால இறை இலக்குகளை எய்துவதற்கு குறிப்பாக திட்டமிடப்பட்ட சீர்திருத்தங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக உறுதியான கட்டுப்பாடுகள் பேணப்படுவதற்கான அவசியத்தினை கோடிட்டுக் காட்டுகின்றன.

6